[2021] 10 S.C.R.161

இந்திய உச்ச நீதிமன்றம்

பிரசாந்த் சிங் ராஜ்புத்

எதிர்

மத்திய பிரதேசம் மாநிலம் மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண். 1202 இன் 2021)

முன்னிலை

(மாண்புமிகு நீதியரசர் முனைவர். திரு. தனஞ்செய ஒய் சந்திர சூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திருமதி.பி. வி.நாகரத்தினா)

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973: பிரிவு 439 – கொலை வழக்கில் முன்பிணை – முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரிவுகள் 161 மற்றும் 164 இன் கீழ் அறிக்கையில் இரண்டு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கும் குற்றத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை குறிப்பிட்டது – இரண்டு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கும் உயர்நீதிமன்றம் முன்பிணை வழங்கியது – எதிர்க்கப்பட்டது – முன்பிணை வழங்கும் உத்தரவில் குற்றத்தின் தன்மை மற்றும் கடுமையினை மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீதான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களை

புறக்கணித்தது– எனவே உயர் நீதிமன்றம் வழங்கிய முன்பிணையை ரத்து செய்ய போதுமான வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிணை: பிணை வழங்கும் உத்தரவுக்கு எதிர்த்து மற்றும் பிணையினை ரத்து செய்ய கோரும் விண்ணப்பம் வழங்கப்பட்டது. மகிபால் வழக்கில் விளக்கப்பட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரத்தை வழிநடத்தும் பரிசீலனைகளை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அணுகு முறையில் வேறுபாடு உள்ளது.

நீதிமன்றம் மேல்முறையீடுகளை அனுமதித்து தீர்ப்பளித்ததாவது:–

1 இந்தக் கட்டத்தில் உள்ள விஷயங்களை ஒரு குற்றவியல் விசாரணையைப் போல நேர்த்தியான பல் சீப்பைக் கொண்டு ஆராய முடியாது. முன்பிணை வழங்குவதற்கான அளவுருக்கள் தனியமர் நீதிபதியால் சரியாக வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டதா என்பதை தீர்மானிக்க வேண்டும். (பாரா 21) (174 A)

2. தற்போதைய சம்பவம் தொடர்பாக, மேல்முறையீட்டாளரின் வழக்கு முதல் தகவல் அறிக்கை, குமுவிச பிரிவுகள் 161 மற்றும் 164 இன் கீழ் அவரது வாக்குமூலங்கள் மற்றும் குமுவிச இன் பிரிவு 164

இன் கீழ் மற்ற இரண்டு நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமமூலங்களால் ஆதரிக்கப்படுகிறது. மறுபுறம், எதிர்மேல்முறையீட்டாளர்கள் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த எதிர் முதல் தகவல் அறிக்கையை சார்ந்துள்ளர், அதன்படி அவர்கள் குற்றம் நடந்த இடத்தில் இல்லை, உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் தற்காப்புக்காக இறந்த விகாஸ் சிங்கை சுட்டுக் கொன்றார். 13 ஜனவரி 2021 மற்றும் 10 மார்ச் 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் உத்தரவுகள் மேல்முறையீட்டாளரின் உத்தரவின் பேரில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை உள்ளடக்கங்களை சுட்டிக்காட்டுகின்றன. 2020 டிசம்பர் 15 தேதியிட்ட விசாரணை அதிகாரியின் முதல் அறிக்கையில், உடன் குற்றஞ்சாட்டப்பவர்களுக்கு எதிராக முதற்கட்ட வழக்கு இருப்பதாகக் கூறப்பட்டது. உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வேண்டுகோளின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்களுக்கு மாறாக விசாரணையின் போது கூடுதல் தகவல்கள் வெளிவந்ததாக 2021 மார்ச் 8 ஆம் தேதியிட்ட கூடுதல் குற்ற அறிக்கை ரசீது தெரிவிக்கிறது. எனவே, மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டிய வழக்கை, எதிர் முதல் தகவல் அறிக்கை மட்டுமே சார்ந்திருந்ததின் மூலம் புறக்கணித்திருக்க முடியாது. (பத்தி 27) (178–எ –d)

3. இந்த சம்பவம் நடந்தபோது எதிர்மேல்முறையீட்டாளர்கள் அங்கு இல்லை என்று தெரிவிக்க, 2020 டிசம்பர் 15 அன்று குவிமுச

பிரிவு 173 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை உயர்நீதிமன்றம் சார்ந்திருந்தது. இருப்பினும், 2021 பிப்ரவரி 13 ஆம் தேதி முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் உத்தரவிலும், 2021 மார்ச் 24 ஆம் தேதி விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிலும் சுட்டிக்காட்டப்பட்ட விசாரணையின் போது வெளிப்படையான குறைபாடுகளை உயர் நீதிமன்றம் சரிசெய்யவில்லை. இவை மற்றவற்றில்: (i) நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களை கவனிக்கத் தவறுதல்; (ii) சம்பவத்திற்குப் பிறகு நடந்த காட்சிகளை சிசிடிவி கேமராவில் சாரப்பட்டது, முந்தைய அல்லது சமகால காட்சிகளை புறக்கணித்தல்; (iii) ஜபல்பூருக்கும் குற்றம் நடந்த இடத்திற்கும் இடையே உள்ள சிசிடிவி காட்சிகளை சேகரிக்கவில்லை; (iv) எதிர்மேல்முறையீட்டாளருக்கும் உண்மையில் அந்த கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தினார்களா என்பதைத் தீர்மானிக்காமல் கைப்பேசி அழைப்பு பதிவுகளை சார்வுற்றுருந்தது; மற்றும் (v) கைரேகைப் பகுப்பாய்வை மேற்கொள்ளவில்லை. பிப்ரவரி 13, 2021 தேதியிட்ட உத்தரவில், முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் இந்த குறைபாடுகளை விசாரணையில் கண்டறிந்து மேலும் விசாரணைக்கு உத்தரவிட்டார். இணை குற்ற அறிக்கை ரசீது சமர்ப்பிக்கப்பட்டவுடன், 10 மார்ச் 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் உத்தரவில், அந்தச் குற்ற அறிக்கை ரசீது உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பானது என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்களின் பங்கைக் குறிப்பிடவில்லை என்றும் குறிப்பிட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்களின் முன்பிணை விண்ணப்பங்களை

நிராகரித்து 24 மார்ச் 2021 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் உள்ள தவறுகளை விசாரணையில் உள்ள வெளிப்படையான குறைபாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இருப்பினும், இந்த முக்கியமான அம்சங்களை தனியமர் நீதிபதி பரிசீலிக்கவில்லை.

(பத்தி 28) (178 டி எச்)

4. குவிமுச பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளரை சுட்டதாக இருக்கும்போது, முதல் தகவல் அறிக்கைக்கும் குவிமுச பிரிவு 161 இன் கீழ் அவரது வாக்குமூலத்திற்கும் அவர் துப்பாக்கியின் பின்புறத்தால் மட்டுமே அவரை தாக்கியதாக பதிவு செய்கிறது என்று எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் வாதிடப்பட்டது. அரசுத் தரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் புரிந்துகொள்ளும் வகையில் விசாரணை இன்னும் நடைபெறவில்லை, மேலும் பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் கூற்றிலுள்ள உண்மைத்தன்மையை அங்கு தீர்மானிக்க முடியும். இருப்பினும், தற்போதைய நிலையில், முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரிவு 161 மற்றும் 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் இரண்டு வாக்குமூலங்களும் எதிர்மேல்முறையீட்டாளர் துப்பாக்கியின் பின்புறத்தால் அவரது தலையில் அடித்தது போலவே உள்ளன. மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை தொடர்பாகவும் ஒரு வாதம் எழுப்பப்பட்டுள்ளது, ஆனால் இது சாட்சியங்கள்

முன்னிலைபடுத்தபட்ட பின்னர் விசாரணையின் கட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும். (பத்தி 29)(179–எ–சி)

5. இந்தக் கட்டத்தில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில், முன்பிணைக்கான விண்ணப்பங்களை அனுமதிப்பதில் உயர்நீதிமன்றம் சரியான கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவரை கொலை செய்யப்பட்ட குற்றம் தீவிரமானது. முதல் தகவல் அறிக்கை மற்றும் குவிமுச யின் 161 மற்றும் 164 பிரிவுகளின் கீழ் உள்ள வாக்குமூலங்கள் குற்றத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கைக் குறிப்பிடுகின்றன. முன்பிணை வழங்கும் உத்தரவு, குற்றத்தின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீதான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களை புறக்கணித்துள்ளது. எனவே, உயர்நீதிமன்றம் வழங்கிய முன்பிணையை ரத்து செய்ய போதுமான காரணங்களை கொண்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. (பாரா 30) (179–டி– ஈ)

மகிபால் எதிர் ராஜேஷ்குமார் (2020)2 எஸ்சிசி 118: (2019) 14 எஸ் சி ஆர் 529 : டாக்டர் நரேஷ் குமார் மங்லா எதிர் அனிதா அகர்வால் மற்றும் பிறர் 2020 எஸ்சிசி ஆன்லைன் எஸ் சி 1031– சார்வுற்றுயிருந்தது.

<u>வழக்கு மேற்கோள்</u>

(2019) 14 எஸ் சி ஆர் 529 சார்வுறப்பட்டது பத்தி 15 (V)

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண். 1202/2021

மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம், ஜபல்பூர் அமர்வு, 01.07.2021 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து, எம்.சி.ஆர்.சி. எண்31835 /2021 எழுகிறது

உடன்

குற்றவியல் மேல்முறையீட்டு எண். 1203/2021

மேல்முறையீட்டாளருக்காக உதய் குப்தா, ஷிவானி எம்.லால், சௌரப் சிங், எம்.கே.திரிபாதி, ஹரிஷ் தாசன், ராஜீவ் ரஞ்சன், ஹிரேன் தாசன், அபினவ் ஸ்ரீவஸ்தவா, சன்னி சௌத்ரி, ஆகிய வழக்கறிஞர்கள் முன்னிலை ஆனார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக மூத்த வழக்கறிஞர் ஆர்.சி. மிஸ்ரா, எஸ்.கே.கங்கேலே, பிரியா சர்மா, பிராத்வி ராஜ் சவுகான், ரிது கங்கேலே, ருத்ர குமார் டே, அரூப் பானர்ஜி, அனன்யா மிஸ்ரா, இலின்

சரஸ்வத், மகேந்திர குமார், சந்தோஷ் குமார் பாண்டே ஆகிய வழக்கறிஞர்கள் முன்னிலை ஆனார்கள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் **முனைவர்** தனஞ்சய ஒய் சந்திரசூட் அவர்களால் பகரப்பட்டது

அட்டவனை

ஏ) மேல்முறையீடு

பி) பொருண்மைகள்

சி) சமர்ப்பிப்புகள்

டி) பகுப்பாய்வு

இ) முடிவு

ஏ) மேல்முறையீடு

1. இந்த மேல்முறையீடுகள் 1 ஜூலை 2021 சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்.5786/2021 ("முதன்மை மேல்முறையீடு") மற்றும் 31 மே 2021 சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்.5788/2021 ("இணை மேல்முறையீடு") தேதியிட்ட தீர்ப்புகளிலிருந்து எழுகின்றன, மஜோலி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றம் தொடர்பாக ,

ஜபல்பூர் மாவட்டம், மத்தியப் பிரதேச மாநிலம், இந்திய தண்டனைச் சட்டம் 1860 பிரிவு 302 மற்றும் 323 மற்றும் பிரிவு 34 ஆகியவற்றின் கீழ் மத்தியப் பிரதேச மாநிலத்திற்கான உயர்நீதிமன்றத்தின் ஜபல்பூர் அமர்வின் தனியமர் நீதிபதி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 இன் பிரிவு 438 இன் கீழ் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்யப்பட்ட முன்பிணை விண்ணப்பங்களை அனுமதித்தது.

2. செப்டம்பர் 29, 2020 அன்று மேல்முறையீட்டாளரால் பதிவு செய்யப்பட்ட டீஹதி நல்சி/முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் குற்றம் பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் குற்றச்சாட்டில் மேல்முறையீட்டாளர் இறந்தவர், விகாஸ் சிங் (அவரது மைத்துனர்) மற்றும் மேலும் இரண்டு நபர்களுடன் (ராஜ்கிஷோர் ராஜ்புத் மற்றும் தர்மேந்தர் படேல்) நெகை திராஹாவில் இருந்தார். குற்றம் சாட்டப்பட்ட நான்கு நபர்களான உஜியார் சிங், அவரது இரண்டு மகன்கள் சந்திரபான் சிங் மற்றும் சூர்யபன் சிங் (இணை மேல்முறையீட்டில் இரண்டாவது குற்றம் சாட்டப்பட்டவர்) மற்றும் அவரது ஓட்டுநர் ஜோகேந்திர சிங் (முன்னணி மேல்முறையீட்டின் இரண்டாவது குற்றம் சாட்டப்பட்டவர்) ஆகியோர் ஜீப்பில் வந்ததாகக் கூறப்படுகிறது. அதன்பிறகு, முந்தைய பகையின் காரணமாக, உஜியர் சிங் மற்றும் சந்திரபான் சிங் ஆகியோர் விகாஸ் சிங்கை சுட்டுக் கொன்றனர், ஜோகேந்திர சிங் அவரைப் பிடித்துக் கொண்டார், இது அவரது மரணத்திற்கு வழிவகுத்தது, சூர்யபன் சிங் அவரது துப்பாக்கியின் பின்புறத்தால் அவரது தலையில் அடித்ததால் காயம் ஏற்பட்டது. மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டபோது, விகாஸ் சிங்

இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

3. சூர்யபன் சிங் மற்றும் ஜோகேந்திர சிங் ஆகியோர் குமுவிச இன் பிரிவு 438 இன் கீழ் முன்பிணை கோரி விண்ணப்பங்களை தாக்கல் செய்தனர். ஜோகேந்திர சிங்கின் முன்பிணை மனுவை உயர்நீதிமன்றம் அனுமதித்தபோது, குற்றவியல் நடைமுறை சட்டம் 173 வது பிரிவின் கீழ் விசாரணை அதிகாரி சமர்ப்பித்த அறிக்கையின்படி, அவர் குற்றம் நடந்த இடத்தில் கூட இருந்ததாக விசாரணையில் தெரியவரவில்லை என்று குறிப்பிட்டது. அத்தகைய அறிக்கையின் உண்மைத்தன்மையை இந்த கட்டத்தில் கேள்விக்குட்படுத்த முடியாது என்று உயர்நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. மேலும், அவர் அந்த இடத்தில் இருந்தாலும் கூட, அவர் இறந்தவர்–விகாஸ் சிங் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவோ அல்லது இறந்தவர்–விகாஸ் சிங் மீது உஜியர் சிங் / சந்திரபான் சிங்கைத் தூண்டிவிட்டதாகவோ அவர் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லை. எனவே, அவரது முன்பிணை மனுவை ஏற்று உயர்நீதிமன்றம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பித்தது.

"எனவே, வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் கருத்தில்கொண்டு விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது, மேலும் விண்ணப்பதாரர் இன்று முதல் பதினைந்து நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தால், வழக்கு

விசாரணையின் போது நீதிமன்றத்தில் அவர் தவறாமல் முன்னிலையாவதற்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை திருப்திப்படுத்தும் வகையில் ரூ.50,000/– (ரூபா ஐம்பதாயிரம் மட்டும்) தனிப்பட்ட பிணைய தொகை வழங்குவதன் மூலம் அவர் முன் பிணையில் விடுவிக்கப்படுவார்.

விண்ணப்பதாரரின் பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க இந்த உத்தரவு செயல்பாட்டில் இருக்கும்:–

1. விண்ணப்பதாரர் அவரால் நிறைவேற்றப்பட்ட பத்திரத்தின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவார்;

2. விண்ணப்பதாரர் வழக்கு விசாரணையில்/விசாரணையில் ஒத்துழைப்பார்;

3. வழக்கின் உண்மைகளை அறிந்த எந்தவொரு நபருக்கும், அத்தகைய உண்மைகளை நீதிமன்றம் அல்லது காவல்துறை அதிகாரிக்கு வெளிப்படுத்துவதிலிருந்து அவரைத் தடுக்க, தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதிகளை

வழங்குவதில் விண்ணப்பதாரர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டார்;

4. விண்ணப்பதாரர் குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தைப் போன்ற குற்றத்தைச் செய்யக்கூடாது;

5. விசாரணையின் போது விண்ணப்பதாரர் தேவையற்ற ஒத்திவைப்புகளை நாடமாட்டார்; மற்றும்

6. வழக்கு விசாரணை நீதிமன்றம்/விசாரணை அதிகாரியின் முன் அனுமதியின்றி விண்ணப்பதாரர் இந்தியாவை விட்டு வெளியேற மாட்டார்.

இதேபோல், சூர்யபன் சிங் தாக்கல் செய்த விண்ணப்பத்தை பரிசீலித்த உயர் நீதிமன்றம், குவிமுச யின் 173 வது பிரிவின் கீழ் விசாரணை அதிகாரியின் அறிக்கையில் அவர் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை, ஆனால் சாட்சிகளின் வாக்குமூலம், குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் மொபைல் எண்களின் டவர் இடம் மற்றும் சிசிடிவி காட்சிகள் அதன் அடிப்படையில் ஜபல்பூரில் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. சூர்யபன் சிங் மீதான 'ஒரே' குற்றச்சாட்டு அவர் மேல்முறையீட்டாளரைத் தாக்கியதுதான், ஆனால் அது ஒரு சாதாரண

காயத்தை மட்டுமே விளைவித்தது என்று உயர் நீதிமன்றம் கூறியது. எனவே, அவரது முன்பிணை மனுவை உயர்நீதிமன்றம் அனுமதித்தது:

"8... எனவே, இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இந்த மனு அனுமதிக்கப்பட்டு, இன்று முதல் பதினைந்து நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர் சரணடைந்தால், வழக்கு விசாரணையின் போது வழக்கமான முறையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதற்காக, 50,000/– (ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்) தனிப்பட்ட பிணைப்பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் திருப்திக்கு இணையான தொகையின் ஒரு உத்தரவாதத்துடன் முன்கூட்டியே ஜாமீனில் விடுவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பதாரரின் பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க இந்த உத்தரவு செயல்பாட்டில் இருக்கும்:–

1. விண்ணப்பதாரர் அவரால் நிறைவேற்றப்பட்ட பிணைய பத்திரத்தின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவார்;

2. விண்ணப்பதாரர் வழக்கு புலனாய்விலும்/விசாரணையில் ஒத்துழைப்பார்;

3. வழக்கின் உண்மைகளை அறிந்த எந்தவொரு நபருக்கும், அத்தகைய உண்மைகளை நீதிமன்றம் அல்லது காவல்துறை அதிகாரிக்கு வெளிப்படுத்துவதிலிருந்து அவரைத் தடுக்க, தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதிகளை வழங்குவதில் விண்ணப்பதாரர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டார்;

4. விண்ணப்பதாரர் குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தைப் போன்ற குற்றத்தைச் செய்யக்கூடாது;

5. விசாரணையின் போது விண்ணப்பதாரர் தேவையற்ற ஒத்திவைப்புகளை நாடமாட்டார்; மற்றும்

6. வழக்கு விசாரணை நீதிமன்றம்/விசாரணை அதிகாரியின் முன் அனுமதியின்றி விண்ணப்பதாரர் இந்தியாவை விட்டு வெளியேற மாட்டார்.

பி) **பொருண்மைகள்**

4. இறந்த விகாஸ் சிங் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கிடையேயான இந்த தகராறு 23 பிப்ரவரி 2019 மற்றும் 27 ஜூலை 2020 ஆகிய தேதிகளில் இறந்த விகாஸ் சிங் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்த புகார்களிலிருந்து தோன்றியதாக கூறப்படுகிறது. உஜியார் சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோருக்கு எதிராக 2019 பிப்ரவரி 23 ஆம் தேதி அவர் அளித்த புகாரில், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தங்களையும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அவரது தொழிலாளர்களையும் அச்சுறுத்தியுள்ளனர் என்றும் அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும் நிலத்தை குத்தகைக்கு எடுத்ததாகவும் குற்றம் சாட்டினார். அவர்கள் தங்கள் வாகனத்தில் தன்னை பின்தொடர்ந்ததாகவும், அவர் மீது பொய்யான புகார்களைப் பதிவு செய்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார். மேலும், அருகில் உள்ள ஆற்றில் இருந்து சட்டவிரோதமாக மணல் அள்ளும் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும், மணல் கொண்டு செல்லும்போது தற்போது அவர் பயிரிட்டு வரும் நிலத்தை கடந்து செல்வதாகவும் (அவர் விவசாயம் செய்யத் தொடங்கியதிலிருந்து அவர்கள் செய்வதைத் தடுத்துவிட்டார்) அவர்கள் தன்னை அச்சுறுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். தானும், அந்த கிராமத்தில் வசிக்கும் குடியிருப்பு வாசிகளும் இதற்கு முன்பு அவர்களுக்கு எதிராக புகார்களை பதிவு

செய்துள்ளோம், ஆனால் காவல்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

5. அதன்பிறகு, ஜோகேந்திர சிங்கிற்கு எதிராக 27 ஜூலை 2020 தேதியிட்ட தனது புகாரில், விகாஸ் சிங், ஜோகேந்திர சிங் முன்பு அவரிடமிருந்து காவல்துறையினர் பறிமுதல் செய்த சட்டவிரோதமாக தோண்டப்பட்ட மணலைத் திருடுவதைப் பிடித்ததாகவும், அதைத் தொடர்ந்து ஜோகேந்திர சிங் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் குற்றம் சாட்டினார். அவரது புகாரின் அடிப்படையில், 28 ஜூலை 2020 அன்று இந்திய தண்டனை சட்டம் 379 வது பிரிவின் கீழ் ஜோகேந்திர சிங்குக்கு எதிராக மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டத்தில் உள்ள பனகர் காவல் நிலையத்தில் குற்றம் எண்.720/2020 பதிவு செய்யப்பட்டது. இறந்தவர்– விகாஸ் சிங் 4 ஆகஸ்ட் 2020 அன்று, மற்றொரு எழுத்துப்பூர்வ புகாரையும் பதிவு செய்திருந்தார், அதில் ஜோகேந்திர சிங் மற்றும் அவரது சகோதரரின் கைகளில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக அவர் அஞ்சியதாகவும், அவரது புகாரின் அடிப்படையில் குற்றம் பதிவு செய்யப்பட்டதிலிருந்து அவரை அச்சுறுத்தியதாகவும் குற்றம் சாட்டினார்.

6. மறுபுறம், ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங்கின் கூற்றுப்படி, விகாஸ் சிங் செய்த புகார்கள் உண்மையில் 30 ஜனவரி

2019 தேதியிட்ட உஜியர் சிங் அவருக்கு எதிராக தாக்கல் செய்த புகாருக்கு பதிலளிக்கும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் புகார்கள் ஆகும். உஜியர் சிங் தனது புகாரில், இறந்த விகாஸ் சிங் மணல் கடத்தும் கும்பலுக்கு தலைமை தாங்கினார் என்றும், இறந்த விகாஸ் சிங் மீது புகார் அளித்தவர் அவர் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், இறந்தவர்–விகாஸ் சிங்கின் குடும்பத்திற்கு குற்றப் பின்னணிகள் இருப்பதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர்: (i) இறந்த விகாஸ் சிங்கின் தந்தை, போதைப்பொருள் மருந்துகள் மற்றும் மனநிலைக்கு ஊறுவிளைவிக்கும் பொருள்கள் சட்டம்1985–ன் பிரிவு 8 உடனிணைந்த 20 (பி) (ii) (சி) மற்றும் ஆயுதச் சட்டம் 1959 இன் பிரிவு 25 (1) (1பி) (ஏ) ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட்ட பின்னர், முறையே 20 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை அனுபவித்து வருகிறார்; மற்றும் (ii) இறந்தவரின் தாத்தா கொலை மற்றும் கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவராக முன்னிலைப்படுத்தப்பட்டவர்

7. தற்போதைய வழக்கு தொடர்பாக, குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 154 இன் கீழ், மேல்முறையீட்டாளரால் வழங்கப்பட்ட தகவலின்படி, 29 செப்டம்பர் 2020 அன்று மதியம் 12:45 மணியளவில், இறந்த விகாஸ் சிங்குடன் மேல்முறையீட்டாளரும் மேலும் இரண்டு நபர்களும் அருகில் நெகாய் திராஹாலில் இருந்தனர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஜோகேந்திர சிங் ஓட்டிச் சென்ற ஜீப்பில்

வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் ஜீப்பை நிறுத்தியவுடன், உஜியர் சிங் ஒரு நாற்காலியில் அமர்ந்தார், அவருடைய மகன்கள் (சந்திரபன் சிங் மற்றும் சூர்யபன் சிங்) அவருக்கு அருகில் நின்றார்கள். அவர்களது முன் விரோதம் காரணமாக, உஜியர் சிங், விகாஸ் சிங்கின் வயிற்றில் துப்பாக்கியால் சுட்டதாக கூறப்படுகிறது. விகாஸ் சிங் ஓட முயன்றபோது, அவரை ஜோகேந்திர சிங் பிடித்தார். சந்திரபான் சிங் பின்னர் உஜியர் சிங்கிடம் இருந்து துப்பாக்கியை எடுத்து, விகாஸ் சிங்கின் தலையில் சுட்டதாகக் கூறப்படுகிறது, அதே நேரத்தில் சூர்யபன் சிங் மேல்முறையீட்டாளரின் தலையில் துப்பாக்கியின் பின்புறத்தால் தாக்கினார். அதன்பிறகு, குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேர் தங்கள் ஜீப்பில் சென்றதாகக் கூறப்படுகிறது, அதே நேரத்தில் மேல்முறையீட்டாளரும் மற்ற இரண்டு நபர்களும் விகாஸ் சிங்கை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர், அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 161 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் 30 செப்டம்பர் 2020 அன்று காவல்துறையால் பதிவு செய்யப்பட்டது. பின்னர், குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் மற்றும் பிற கண்ணுற்ற சாட்சியங்கள் என்று கூறப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் 16 அக்டோபர் 2020 அன்று பதிவு செய்யப்பட்டன.

8. இதே சம்பவம் தொடர்பாக, உஜியர் சிங், மத்தியப் பிரதேச மாநிலம், ஜபல்பூர் மாவட்டம், மஜோலி காவல் நிலையத்தில் குற்ற எண்.331/2020 இறந்தவர்–விகாஸ் சிங் மற்றும் மேல்முறையீட்டாளர் மீது இந்திய தண்டனைச் சட்டம் 294, 506, 323, 324 மற்றும் 34 கீழ் 30 செப்டம்பர் 2020 அன்று ஒரு குற்றத்தைப் பதிவு செய்தார். குறுக்கு முதல் தகவல் அறிக்கை, 2020 செப்டம்பர் 29 அன்று மதியம் 12.45 மணி முதல் 1 மணி வரை குற்றம் நடந்ததாக அவர் குற்றம் சாட்டினார். இறந்த விகாஸ் சிங் மற்றும் மேல்முறையீட்டாளர் நேகை திராஹா அருகே வந்தபோது, தனது ஓட்டுநர் பப்லூ வாகனத்தை ஓட்டிச் சென்றதாக அவர் குற்றம் சாட்டினார். அங்கு, இறந்த–விகாஸ் சிங் வீடியோ பதிவு செய்யத் தொடங்கினார், அவர் மணல் கடத்தல் கும்பலை சேர்ந்தவர் என்று அவரிடம் கூறி துன்புறுத்த செய்யத் தொடங்கினார். அவர் அவரை நிறுத்தச் சொன்னதாகக் கூறப்படும்போது, மேல்முறையீட்டாளர் காதுக்கு மேலே அவரது தலையின் இடது பக்கத்தில் ஒரு லத்தியால் தாக்கியதாகக் கூறப்படுகிறது, அது இரத்தம் வரத் தொடங்கியது, இறந்த விகாஸ் சிங் அவரை உதைகள் மற்றும் குத்துக்களால் தாக்கத் தொடங்கினார். விகாஸ் சிங் மீது பதிவு செய்யப்பட்ட 0.22 புரிகுழல் சுழல் துமுக்கி ரக துப்பாக்கியால் சுட்டபோது, அது அவரது வயிற்றிலும் தலையிலும் தாக்கியதாக அவர் குற்றம் சாட்டினார். மேல்முறையீட்டாளர் தனது கையை லத்தியால் அடித்ததாகக் கூறப்பிட்டார் இதன் காரணமாக துப்பாக்கியின் பின்பகுதி மற்றும் குழல் உடைந்து அவரது இடது

கையிலிருந்து இரத்தம் கசிந்தது. பின்னர், அவர் தனது ஓட்டுநர் பப்லூவுடன் அங்கிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்பிடப்பட்டது.

9. தற்போதைய சம்பவத்தின் விசாரணையின் போது, ஜோகேந்திர சிங் மணல் திருடியதற்காக இதச 379 வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றத்தில் முன்பிணை கோரி விண்ணப்பித்திருந்தார். அக்டோபர் 8, 2020 தேதியிட்ட அதன் உத்தரவின்படி, உயர் நீதிமன்றம் விண்ணப்பத்தை நிராகரித்தது, அதே நேரத்தில் விண்ணப்பத்தில் எதிர்த்தவர் (இறந்தவர்–விகாஸ் சிங்) கொலை செய்யப்பட்டார், அதில் ஜோகேந்திர சிங் குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டார். உயர்நீதிமன்றம் கூறியதாவது:–

"இந்த வழக்கு, மணல் திருட்டு வழக்கில் முன்பிணை பெறுவதற்கான எளிய வழக்கைத் தாண்டி, கடந்து சென்றுள்ளது. பின்னர், இந்த விண்ணப்பம் நிலுவையில் இருக்கும் போது, எதிர்ப்பு தெரிவித்தவர் கொலை செய்யப்பட்டார், அதில் விண்ணப்பதாரர் குற்றம் சாட்டப்பட்டவராக குறிப்பிடப்பட்டுள்ளார், மேலும் சம்பவ இடத்தில் அவர் இருந்ததையும், அவர் உயிரை காப்பாற்றிகொள்ள இறந்தவர் தப்பி ஓட முயன்றபோது இறந்தவரை பின்னோக்கி இழுக்கும் செயலில் ஈடுபட்டார் என நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகள் கூறுகின்றனர்.

அது எப்படியிருந்தாலும், குற்ற எண். 329/2020 இன் தகுதிகள் குறித்த எந்த அவதானிப்புகளையும் இந்த நீதிமன்றம் வழங்குவதைத் தவிர்க்கிறது. ஆனால் அதே சமயம், இந்த வழக்கில் ஆட்சேபனை செய்தவர் கொலை செய்யப்பட்டு, இந்த வழக்கு மிகவும் தீவிரமான திருப்பத்தை எடுத்து, மணல் திருட்டு வழக்காக மட்டும் நின்றுவிடாததால் இந்த நீதிமன்றம் கண்களை மூடிக்கொள்ள முடியாது.

சூழ்நிலையில், இது குற்ற எண்.720/2020 ஐப் பொருத்தவரை காவலில் வைத்து விசாரிக்க வேண்டிய ஒரு வழக்காக இருக்கலாம், எனவே விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

அதன்பிறகு, ஜோகேந்திர சிங் தனது விண்ணப்பத்தை முழுவதுமாக திரும்பிப் பெற்றுக்கொண்டார், குநமுச இன் பிரிவு 439 இன் கீழ் வழக்கமான பிணைக்கான விண்ணப்பத்தை தாக்கல் செய்ய கோரினார், இது 7 ஜனவரி 2021 தேதியிட்ட உயர் நீதிமன்றத்தால் அதன் இறுதி உத்தரவில் பதிவு செய்யப்பட்டது.

10 டிசம்பர் 15, 2020 அன்று குநமுச இன் 173 வது பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையில், உஜியர் சிங் மற்றும் சந்திரபான் சிங் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர், ஆனால் ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபான் சிங் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 40 கி.மீ தொலைவில் உள்ள ஜபல்பூரில் இருந்ததால் விகாஸ் சிங்கின் மரணத்தில் எந்த பங்கும் இல்லை என்று கூறப்பட்டது. இந்த அறிக்கை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது: (i) ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங்கின் கைப்பேசியிலிருந்து அழைப்பு பதிவுகள், டவர் மேப்பிங் மற்றும் பப்ளிக் ஸ்விட்ச்டு டெலிபோன் நெட்வொர்க் தரவு; (ii) சிசிடிவி காட்சிகள்; மற்றும் (iii) ஜபல்பூரில் அவர்கள் இருப்பதை உறுதிப்படுத்தும் தனிப்பட்ட சான்றுரைஞரின் வாக்குமூலம்.

11 மேல்முறையீட்டாளர் மற்றும் இறந்த விகாஸ் சிங்கின் குடும்ப உறுப்பினர்கள் எதிர்ப்பு மனுவை தாக்கல் செய்தனர். ஜனவரி 13, 2021 தேதியிட்ட உத்தரவின்படி, குற்றவியல் நீதித்துறை நடுவர் முதல் வகுப்பு, சிரோஹா பின்வரும் காரணங்களுக்காக மேலும் விசாரணைக்கு உத்தரவிட்டார்: (i) விசாரணை அதிகாரியின் அறிக்கை, குற்றம் நடந்த இடத்தில் அவர்கள் இருப்பதைக் கவனித்த மேல்முறையீட்டாளர் மற்றும் பிற நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் அறிக்கைகளை விட, ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபான் சிங் ஆகியோர் ஜபல்பூரில் இருப்பதை நிரூபிக்கும் சி.சி.டி.வி

காட்சிகள் மற்றும் சாட்சி அறிக்கைகளில் அதிக கவனம் செலுத்தியது; (ii) குற்றம் நடந்த இடத்தின் காவல்துறையினரால் பெறப்பட்ட சிசிடிவி காட்சிகள் பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, மேல்முறையீட்டாளரின் முதல் தகவல் அறிக்கையில் மற்றும் உஜியர் சிங்கின் முதல் தகவல் அறிக்கை கூட சம்பவத்தின் நேரத்தை மதியம் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி மற்றும் 12.45 முதல் பிற்பகல் 1.00 மணி வரை குறிப்பிடுகின்றன. (iii) சம்பவம் நடந்த இடத்திற்கும் ஜபல்பூருக்கும் இடையிலான சாலைகளில் உள்ள சிசிடிவி காட்சிகளை காவல்துறையினர் சரிபார்க்கவில்லை; (iv) உஜியர் சிங்கின் வாக்குமூலத்திற்கும் அவரது முதல் தகவல் அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் இருந்தன; (v) ஜோகேந்திர சிங்கின் கைரேகைகள் ஜீப்பில் இருந்து பெறப்படவில்லை (அவர் ஓட்டிச் சென்றதாகக் கூறப்பட்டது); மற்றும் (vi) உஜியர் சிங்கின் துப்பாக்கியிலிருந்து சூர்யபன் சிங்கின் கைரேகைகள் எடுக்கப்படவில்லை.

12. விகாஸ் சிங்கின் மரணத்தில் உஜ்யார் சிங் மற்றும் சந்திரபான் சிங் ஆகியோரின் தொடர்பு இருப்பதைக் காட்டும் ஆதாரங்கள் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் விசாரணைகளின் அடிப்படையில் வெளிவந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டு 2021 மார்ச் 8 அன்று விசாரணை அதிகாரி ஒரு கூடுதல் குற்ற அறிக்கை ரசீதினை தாக்கல் செய்தார். எனவே, மார்ச் 10, 2021 தேதியிட்ட உத்தரவில், விசாரணை

அதிகாரி உஜியர் சிங் மற்றும் சந்திரபான் சிங் ஆகியோருக்கு எதிராக மட்டுமே விசாரணை நடத்தியதாகவும், சூர்யபன் சிங் மற்றும் ஜோகேந்திர சிங் மீதான குற்றச்சாட்டுகளை சரியாகக் கருத்தில் கொள்ளவில்லை என்றும் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் பரிசீலித்தார். இதனால் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

13. ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோர் முன்பிணை கோரி பிணை விண்ணப்ப எண்.89/2021 மற்றும் பிணை விண்ணப்ப எண்.88/2021 விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தனர் 24 மார்ச் 2021 தேதியிட்ட தனித்தனி உத்தரவுகளால், விசாரணை நீதிமன்றம் அவர்களின் விண்ணப்பங்களை நிராகரித்தது (i) முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் 13 ஜனவரி 2021 தேதியிட்ட முந்தைய உத்தரவு விசாரணை அதிகாரியின் விடுபடல்களை சுட்டிக்காட்டினார் (ii) விசாரணை அதிகாரி அழைப்பு பதிவுகளை சார்வுற்றிருந்தார் ஆனால் ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் அந்த எண்களைப் பயன்படுத்தினார்களா அல்லது அவர்கள் தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தவில்லை; மற்றும் (iii) குமுவிச இன் பிரிவுகள் 161 மற்றும் 164 இன் கீழ் சாட்சியின் வாக்குமூலங்கள் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கை வழங்குகின்றன, இறந்த–விகாஸ் சிங் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு இடையே

உள்ள முன் பகையின் காரணமாக மட்டுமே என்று பரிசீலிக்க முடியாது.

14 ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோர் முன்பிணை கோரி உயர் நீதிமன்றத்தில் எம்சிஆர்சி எண்.31835/2021 மற்றும் எம்சிஆர்சி எண்.18604/2021 விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம் முறையே 1 ஜூலை 2021 மற்றும் 31 மே 2021 அன்று விண்ணப்பங்களை அனுமதித்தது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகள் இந்த நீதிமன்றத்தின் முன் கேள்விக்குறியாக உள்ளன.

சி சமர்ப்பிப்புகள்

15. உயர் நீதிமன்ற தனியமர் நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து, திரு.உதய் குப்தா மேல்முறையீட்டாளர் சார்பாக பின்வரும் சமர்ப்பிப்புகளை வலியுறுத்தினார்:

(i) ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபான் சிங் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்தில் இருந்திருக்க முடியாது என்றும், இந்த கட்டத்தில் அறிக்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்க முடியாது என்றும் விசாரணை அதிகாரியின் அறிக்கையை மட்டுமே சார்ந்து தனியமர் நீதிபதி கூறினார்;

(ii) 13 ஜனவரி 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் உத்தரவிலும், 24 மார்ச் 2021 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிலும் உள்ள அவதானிப்புகளை தனியமர் நீதிபதி புறக்கணித்தார், இது விசாரணை அதிகாரியால் நடத்தப்பட்ட விசாரணை குற்றம் தொடர்பான முக்கிய சூழ்நிலைகளைப் புறக்கணித்தது என்பதைக் குறிக்கிறது. ;

(iii) குற்றம் சாட்டப்பட்ட நால்வரும் ஒரு ஜீப்பில் ஒன்றாக வந்திருந்ததால், ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் சம்பவ இடத்திலேயே இருந்ததாகவும், குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் குற்றத்தில் குறிப்பிட்ட பங்கு இருந்ததாகவும், மேல்முறையீட்டாளர் மற்றும் பிற நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை தனியமர் நீதிபதி புறக்கணித்தார். (அ) ஜோகேந்திர சிங் ஜீப்பை ஓட்டி வந்தார், பின்னர் உஜியர் சிங் அடிவயிற்றில் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிக்க முயன்ற விகாஸ் சிங்கைத் தடுத்து நிறுத்தினார், அதைத் தொடர்ந்து சந்திரபான் சிங் அவரைத் தலையில் சுட்டார்; மற்றும் (ஆ) சூர்யபன் சிங், மேல்முறையீட்டாளரை துமுக்கியின் பின்புறத்தால் தாக்கினார்;

(iv) உயர்நீதிமன்றத்தின் மற்றொரு தனியமர் நீதிபதி, இறந்த விகாஸ் சிங் அளித்த புகாரின் பேரில் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பாக அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் கூட, ஜோகேந்திர சிங் தாக்கல் செய்த முன்கூட்டிய பிணை கோரிக்கையை நிராகரித்தார்; மற்றும்

(v) தனியமர் நீதிபதி குற்றத்தின் தீவிரத்தன்மையையும், பாரதூரத்தன்மையையும், பொருள் சார்ந்த அம்சங்களையும் புறக்கணித்துள்ளார். எனவே, இந்த நீதிமன்றம் வழங்கிய முன்பிணையினை ரத்து செய்ய வேண்டும். இந்த நீதிமன்றம் மகிபால் எதிர் ராஜேஷ் குமார் ("மஹிபால்") (2020) 2 எஸ்சிசி 118 பத்தி 16–ல் வகுத்துள்ள கொள்கைகளின்படி குறிப்பிட்டுள்ளார்.

16 ஜோகேந்திர சிங் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திரு எஸ்.கே.கங்கேலே வலியுறுத்தினார்:

(i) விசாரணை அதிகாரி தாக்கல் செய்த அறிக்கை, சம்பவம் நடந்த இடத்தில் ஜோகேந்திர சிங் இல்லை, ஆனால் ஜபல்பூரில் இருந்தார்;

(ii) உஜியர் சிங்கின் உத்தரவின் பேரில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, விகாஸ் சிங்கின் மரணத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் மாற்று விளக்கத்தை அளிக்கிறது, அதன்படி உஜியர் சிங் இறந்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார், ஏனெனில் அவரும் மேல்முறையீட்டாளரும் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர்; மற்றும்

(iii) உஜியர் சிங்கின் முதல் தகவல் அறிக்கையில், மேல்முறையீட்டாளரால் அவரது துமுக்கி ரக துப்பாக்கி உடைக்கப்பட்டு, அவர் தலையிலும் கையிலும் ஒரு லத்தியால் காயமடைந்தார், இரண்டு காயங்களும் விளக்கப்படவில்லை.

17 சூர்யபன் சிங் சார்பில் முன்னிலையான மூத்த வழக்கறிஞர் திரு ஆர்.சி மிஸ்ரா வலியுறுத்தினார்

(i) மணல் கடத்தல் கும்பலை நிர்வகித்து நடத்தி வந்த இறந்த விகாஸ் சிங்கிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் இடையிலான பகை காரணமாக அவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார், இதற்கு எதிராக அவரது தந்தை குற்றம் சாட்டப்பட்ட உஜியார் சிங் புகார்

அளித்திருந்தார். இறந்த விகாஸ் சிங்கிற்கும் குற்றப் பின்னணி இருந்தது;

(ii) சூர்யபன் சிங் அவரை துமுக்கி ரக துப்பாக்கியின் பின்புறத்தால் தாக்கியதால் மேல்முறையீட்டாளர் தலையில் காயம் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு காயத்தின் தன்மைக்கு முரணானது, இது ஒரு சிராய்ப்பு; மற்றும்

(iii) குமுவிச இன் பிரிவு 161 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை மற்றும் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம், சூர்யபன் சிங் மேல்முறையீட்டாளரை துப்பாக்கியால் தாக்குவதற்கு முன்பு சுட்டதாக எந்தக் குற்றச்சாட்டையும் கூறவில்லை, அதே சமயம் குமுவிச இன் பிரிவு 164 இன் கீழ் அவரது அறிக்கை அந்தக் கோரிக்கையை முதல் முறையாக முன்வைக்கிறது. அத்தகைய பொதியுரை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை மற்றும் இறந்த விகாஸ் சிங்கின் உடலில் தோட்டாக்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன.

18 மத்தியப் பிரதேச மாநிலம் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் திரு அபினவ் ஸ்ரீவஸ்தவா, முன்பிணை வழங்கும் உத்தரவு நீடிக்க முடியாதது என்று வலியுறுத்தினார்:

(i) குற்றம் ஒரு தீவிரமான தன்மை கொண்டது; மற்றும்

(ii) 13 ஜனவரி 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி, உஜியர் சிங் மற்றும் சந்திரபான் சிங் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டனர், ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோர் தொடர்ந்து தலைமறைவாக இருந்தனர்.

19 எதிர் சமர்ப்பிப்புகள் இப்போது எங்கள் பரிசீலனைக்கு வந்துள்ளது.

டி) **பகுப்பாய்வு**

20. முதல் தகவல் அறிக்கையில் ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபான் இருவருக்கும் குற்றத்தில் குறிப்பிட்ட பங்கு உள்ளதை குறிப்பிடுகிறது. கு மு வி ச இன் பிரிவு 161 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் பின்வருவனவற்றை குறிப்பிடுகிறது: (i) உஜியர் சிங், இறந்த விகாஸ் சிங்குடன் சேர்ந்து அவர் சாகுபடி செய்து கொண்டிருந்த நிலத்தின் வழியாக சட்டவிரோதமாக மணல் எடுப்பார்; (ii) அவர்கள் உஜியர் சிங்கிடம் விலகச் சொன்னபோது, அவர் கோபமடைந்து, இறந்த விகாஸ் சிங் மீது

பொய்யான புகார்களைப் பதிவு செய்தார்; (iii) 29 செப்டம்பர் 2020 அன்று, இறந்த–விகாஸ் சிங் மற்றும் மேல்முறையீட்டாளர் இறந்த–விகாஸ் சிங்கின் வாகனத்தில் நேகை திராஹாவுக்குச் சென்று மதியம் 1.00 மணியளவில் அங்கு சென்றடைந்தனர், அங்கு அவர்கள் மற்ற இருவரையும் (ராஜ்கிஷோர் ராஜ்புத் மற்றும் தர்மேந்திர படேல்) சந்தித்தனர். ; (iv) குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேர் (உஜியர் சிங், சந்திரபான் சிங், சூர்யபன் சிங் மற்றும் ஜோகேந்திர சிங்) ஜோகேந்திர சிங் ஓட்டிச் சென்ற ஜீப்பில் வந்தனர்; (v)விகாஸ் சிங் ஒரு அழைப்பைப் பெற்று நேகாய் சாலையை நோக்கிச் செல்லத் தொடங்கினார். அப்போது உஜ்யார் சிங் அவரை வயிற்றில் சுட்டார் (vi) விகாஸ் சிங் தப்பிச் செல்ல முயன்றபோது, ஜோகேந்திர சிங் அவரைப் பிடித்தார், சந்திரபான் சிங் உஜியர் சிங்கிடம் இருந்து துப்பாக்கியை எடுத்து தலையில் சுட்டார்; (vii) சூர்யபன் சிங், சந்திரபான் சிங்கிடம் இருந்து துப்பாக்கியை எடுத்து, துப்பாக்கியின் பின்புறத்தைப் பயன்படுத்தி மேல்முறையீட்டாளரின் தலையில் தாக்கினார்;(viii) நிலேஷ் கோடியா தனது காரில் வந்து அவர்களைப் பார்த்தார், அதைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளரும் மற்ற இரண்டு நபர்களும் விகாஸ் சிங்கை நிலேஷின் காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர், அங்கிருந்து ஆம்புலன்ஸில் மருத்துவக் கல்லூரிக்கு அவரை மாற்றினர். அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது; மற்றும் (ix) காவல் துறையினர் மருத்துவக் கல்லூரிக்கு வந்தனர், அதைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் தனது புகாரை பதிவு செய்தார்.

21. இந்தக் கட்டத்தில் உள்ள விஷயங்களை ஒரு குற்றவியல் விசாரணையைப் போல நேர்த்தியான பல் சீப்பைக் கொண்டு ஆராய முடியாது. முன்பிணை வழங்குவதற்கான அளவுருக்கள் தனியமர் நீதிபதியால் சரியாக வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டதா என்பதை தீர்மானிக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான வழக்கறிஞரின் தொடர்ச்சியான சமர்ப்பிப்பில் கவனம் செலுத்தி குமுவிச இன் பிரிவு 161 மற்றும் பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலங்களுக்குகிடையில் சில மாறுபாடுகளைக் கொண்டுள்ளது, அதாவது: (i) மேல்முறையீட்டாளரும் இறந்தவரும் மதியம் 12.15 மணியளவில் நெகை திராஹாவை அடைந்தனர், மற்றும் 1.00 மணி அல்ல; மற்றும் (ii) சந்திரபான் சிங்கால் விகாஸ் சிங் தலையில் சுடப்பட்ட பிறகு, சூர்யபன் சிங் முதலில் மேல்முறையீட்டாளர் மீது சுட்டார், ஆனால் அந்த சுடப்பட்ட குண்டு அவரது தலைக்கு மேலே சென்றது. அதன்பின், சூர்யபன் சிங் துப்பாக்கியின் பின்புறத்தால் அவரது தலையில் அடித்ததைத் தொடர்ந்து, துமுக்கி ரச துப்பாக்கியின் கைப்பிடி உடைந்து அங்கேயே விழுந்தது.

22 குமுவிச இன் பிரிவு 164 ன் கீழ், நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சியான ராஜ்கிஷோர் ராஜ்புத்தின் வாக்குமூலம் குறிப்பிடுவதாவ:– (i) 29 செப்டம்பர் 2020 அன்று, இறந்த–விகாஸ் சிங் காலை 9 மணிக்கு அவரது வீட்டிற்கு வந்து, அவரை நெகாய் திராஹாவில்

சந்திக்கச் சொன்னார்; (ii) அவர் நண்பகல் 12 மணிக்கு தர்மேந்தர் படேலுடன் நேகை திராஹாவை அடைந்தார், அதைத் தொடர்ந்து இறந்த விகாஸ் சிங் மேல்முறையீட்டாளருடன் அவரது வாகனத்தில் வந்தார்; மற்றும் (iii) விகாஸ் சிங்கைக் கொலை செய்த பிறகு, குற்றம் சாட்டப்பட்ட நால்வரும் தங்கள் ஜீப்பில் புறப்பட்டனர்.

23 குமுவிச பிரிவு 164 இன் கீழ் மற்றொரு நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சியான தர்மேந்தர் படேலின் வாக்குமூலத்தில் குறிப்பிட்டதாவது, அவர் நெகை திராஹாவை அடைந்தபோது, ராஜ்கிஷோர் ராஜ்புட்டைப் பார்த்ததாகக் குறிப்பிடுகிறது, அவர் இறந்த– விகாஸ் சிங் வரவிருப்பதாகத் தெரிவித்தார். அதுமட்டுமின்றி, அவரது வாக்குமூலம் மேல்முறையீட்டாளர் மற்றும் ராஜ்கிஷோர் ராஜ்புத் ஆகியோரின் வாக்குமூலங்களுடன் 164 வது பிரிவின் கீழ் ஒத்துப்போகிறது.

டி.1 முன்பிணையை ரத்து செய்தல்

24 மஹிபாலில் (மேற்படி) வழக்கில் இந்த நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் அமர்வு வழங்கிய தீர்ப்பில், பிணை வழங்கிய உத்தரவு மற்றும் வழங்கப்பட்ட பிணை ரத்து செய்வதற்கான விண்ணப்பம் ஆகியவற்றை வாதங்களுக்கு உட்படுத்தும்போது இந்த நீதிமன்றம்

பின்பற்ற வேண்டிய அணுகுமுறையில் உள்ள வேறுபாட்டை இந்த நீதிமன்றம் குறிப்பிட்டது. நீதிமன்றம் கூறியதாவது:

"16. பிணை வழங்கும் உத்தரவின் சரியான தன்மையை மதிப்பிடுவதில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரத்தை வழிநடத்தும் பரிசீலனைகள் பிணை ரத்து செய்வதற்கான விண்ணப்பத்தின் மதிப்பீட்டிலிருந்து வேறுபட்ட அடிப்படையில் நிற்கின்றன. பிணை வழங்கும் உத்தரவின் சரியான தன்மை, பிணை வழங்குவதில் விருப்புரிமையின் முறையற்ற அல்லது தன்னிச்சையான செயல்பாடு உள்ளதா என்ற கோணத்தில் சோதிக்கப்படுகிறது. பிணை வழங்கும் உத்தரவு விபரீதமானதா, சட்டவிரோதமானதா அல்லது நியாயமற்றதா என்பதுதான் சோதனை. மறுபுறம், பிணை ரத்து செய்வதற்கான விண்ணப்பம், பிணை வழங்கப்பட்ட ஒருவரால் மேற்பார்வையிடும் சூழ்நிலைகள் அல்லது பிணை நிபந்தனைகளை மீறுவது போன்றவற்றின் மீது பொதுவாக ஆராயப்படுகிறது. நீரு யாதவ் எதிர் உத்திர பிரதேஷ் [நீரு யாதவ் எதிர் உத்திர பிரதேச மாநிலம், (2014) 16 எஸ்சிசி 508 : (2015) 3 எஸ்சி சி (சிஆர்ஐ) 527], குற்றம் சாட்டப்பட்டவருக்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது [மித்தன் யாதவ் எதிர் உத்திர பிரதேச மாநிலம், 2014 எஸ்சிசி ஆன்லைன் ஆல் 16031]. உயர் நீதிமன்றத்தின் [மித்தன் யாதவ் எதிர் உ.த்திர பிரதேச மாநிலம், 2014 எஸ்சிசி

ஆன்லைன் ஆல் 16031] உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில், இந்த நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் பிணை வழங்குவதற்கு வழிகாட்டும் கொள்கைகள் குறித்த முன்னுதாரணத்தை ஆய்வு செய்தது. (அப்போது கற்றறிந்த தலைமை நீதியரசராக இருந்த) தீபக் மிஸ்ரா, (நீரு யாதவ் வழக்கு [நீரு யாதவ் எதிர் உ.த்திர பிரதேச மாநிலம், (2014) 16 எஸ்சிசி 508 : (2015) 3 எஸ்சிசி (சிஆர்ஜ) 527] , எஸ்சிசி பக்கம் 513, பத்தி 12) பின்வருமாறு தீர்ப்பளித்தார்.

"12. ... குற்றம் சாட்டப்பட்டவர் தவறான நடத்தை காட்டியதாலோ அல்லது அவ்வாறு ரத்து செய்யப்படுவதற்கு காரணமான சில சூழ்நிலைகள் ஏற்பட்டதாலோ பிணை வழங்கப்பட்ட பின்னர் பிணை ரத்து செய்யப்படுவது நியாயமற்ற, சட்டவிரோதமான மற்றும் மோசமான பிணை வழங்கும் உத்தரவை விட முற்றிலும் வேறுபட்ட பிரிவில் உள்ளது என்பது சட்டத்தில் நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஒரு வழக்கில், பிணை விண்ணப்பத்தை கையாளும் போது கருத்தில் கொள்ள வேண்டிய தொடர்புடைய காரணிகள் கவனிக்கப்படாமல் இருந்தால், அல்லது பொருத்தமற்ற கருத்தில் பிணை நிறுவப்பட்டிருந்தால், சந்தேகத்திற்கு இடமின்றி உயர் நீதிமன்றம் அத்தகைய பிணை வழங்கும் உத்தரவை ரத்து செய்யலாம். அத்தகைய வழக்கு வேறு வகையைச் சேர்ந்தது

மற்றும் ஒரு தனி அதிகாரவரம்பை கொண்டுள்ளது. இரண்டாவது இயல்புடைய ஒரு வழக்கைக் கையாளும் போது, குற்றம் சாட்டப்பட்டவர் நிபந்தனைகளை மீறியது அல்லது பின்னர் நடந்த மேற்பார்வை சூழ்நிலைகள் குறித்து நீதிமன்றம் கவனம் செலுத்தவில்லை. இது, மாறாக, நீதிமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட உத்தரவின் நியாயத்தன்மை மற்றும் உறுதியை ஆராய்கிறது.

17. பிணை விண்ணப்பத்தை பரிசீலிக்கும் நீதிமன்றம் தொடர்புடைய காரணிகளைக் கருத்தில் கொள்ளத் தவறினால், மேல்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கும் உத்தரவை நியாயமான முறையில் ரத்து செய்யலாம். பிணை வழங்கும் உத்தரவு மனதிற்கு பொருந்தாத காரணத்தால் பாதிக்கப்படுகிறதா அல்லது பதிவில் உள்ள ஆதாரங்களின் முதன்மை பார்வையில் இருந்து ஏற்கப்படவில்லையா என்பதை மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும். எனவே, சாட்சியப் பதிவின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தைச் செய்தார் என்று நம்புவதற்கு முதன்மையான அல்லது நியாயமான காரணம் உள்ளதா என்பதை இந்த நீதிமன்றம் மதிப்பிடுவது அவசியமாகும், மேலும் குற்றத்தின் தீவிரம் மற்றும் தண்டனையின் கடுமையை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்..."

(முக்கியத்துவம் அளிக்கப்பட்டது)

25 டாக்டர் நரேஷ் குமார் மங்லா எதிர் அனிதா அகர்வால் மற்றும் பலர் 2020 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 1031 இன் மற்றொரு தீர்ப்பில், இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட நீதியர் ஆயத்தில், அவரது மனைவியின் இயற்கைக்கு மாறான மரணத்தைத் தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட முன்பிணையினை ரத்து செய்தது. நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்குவது குறித்து அதிகாரிகளை ஆய்வு செய்து கூறியது:

"19. சுசீலா அகர்வால் எதிர் மாநிலம் (டெல்லி தலைநகரம்) [(2020) 5 எஸ்சிசி 1] வழக்கில் அரசியலமைப்பு அமர்வின் சமீபத்திய முடிவில், முன்பிணை வழங்குவதற்கான விண்ணப்பத்தை தீர்மானிப்பதில் நீதிமன்றத்துடன் பரிசீலிக்க வேண்டிய கருத்துக்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் இறுதி முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன:

"....92.3...ஒரு விண்ணப்பத்தை பரிசீலிக்கும் போது (முன்கூட்டியே பிணை வழங்க) நீதிமன்றம் குற்றத்தின் தன்மை, நபரின் பங்கு, விசாரணையின் போக்கில் அவர் செல்வாக்கு செலுத்துவதற்கான சாத்தியம், அல்லது ஆதாரங்களை கையாளுதல் (சாட்சிகளை அச்சுறுத்துவது உட்பட), நீதியைத் தவிர்ப்பதற்கான சாத்தியம் (நாட்டை விட்டு வெளியேறுவது போன்றவை) ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

92.4. நீதிமன்றங்கள் பொதுவாக முன்பிணை வழங்குவதா அல்லது மறுப்பதா என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, குற்றங்களின் தன்மை மற்றும் குற்றத்தின் தீவிரம், விண்ணப்பதாரருக்குக் கூறப்படும் பங்கு மற்றும் வழக்கின் உண்மைகள் போன்ற பரிசீலனைகளால் வழிநடத்தப்பட வேண்டும். பிணை வழங்குவதா வேண்டாமா என்பது விருப்பத்தின் விஷயம்; சமமாக, எந்த வகையான சிறப்பு நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும் (அல்லது விதிக்கப்படக்கூடாது) என்பது வழக்கின் பொருண்மைகளைப் பொறுத்தது மற்றும் நீதிமன்றத்தின் விருப்பத்திற்கு உட்பட்டது.

20. பிணை வழங்கும் உத்தரவின் சரியான தன்மை மேல்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்தால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும், ஜாமீன் வழங்கும் நீதிமன்றம் முக்கிய உண்மைகள் அல்லது முக்கியமான சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளவில்லை என்ற அடிப்படையில் அதைத் தள்ளுபடி செய்யலாம் என்றும் அரசியலமைப்பு அமர்வு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

22. முன்பிணை வழங்குவதற்கும் வழக்கமான பிணை வழங்குவதற்கும் வழிகாட்டும் பரிசீலனைகளுக்கு இடையிலான வேறுபாட்டை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது. போகர் ராம் எதிர் ராஜஸ்தான் மாநிலம் [(1985) 2 எஸ்சிசி 597] இல், முன்பிணை வழங்கும் உத்தரவை ரத்து செய்யும் போது, இந்த நீதிமன்றம் பரிசீலித்ததாவது:

"... முன்பிணை விஷயத்தில், முன்மொழியப்பட்ட குற்றச்சாட்டு நீதியின் முடிவை மேம்படுத்தும் நோக்கத்தில் இருந்து தோன்றவில்லை, ஆனால் சில உள்நோக்கத்தால் தோன்றினால், விண்ணப்பதாரரைக் கைது செய்வதன் மூலம் அவரை காயப்படுத்துவதும் அவமானப்படுத்துவதும் நோக்கமாகும் என்று கற்றறிந்த தலைமை நீதிபதி கூறுகிறார். விண்ணப்பதாரர் கைது செய்யப்பட்டால் அவரை பிணையில் விடுவிப்பதற்கான வழிமுறை பொதுவாக செய்யப்படும். இது கவனிக்கப்பட்டது, "உத்தேச குற்றச்சாட்டானது தவறான செயல்களால் செயல்படுத்தப்பட்டதாகத் தோன்றினால் தவிர, முன் பிணை வழங்க முடியாது என்று ஒரு தவிர்க்க முடியாத விதியாக வகுக்க முடியாது; மேலும், விண்ணப்பதாரர் தலைமறைவாகிவிடுவார் என்ற அச்சம் இல்லாவிட்டால், அந்த முன்பிணை வழங்கப்பட வேண்டும். அதில் கவனிக்கப்பட்ட, விருப்புரிமையை நிர்வகிக்கும் சில தொடர்புடைய பரிசீலனைகள்,

"முன்மொழியப்பட்ட குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை, குற்றச்சாட்டுகளை உருவாக்குவதற்கு வழிவகுக்கும் நிகழ்வுகளின் சூழல், விசாரணையில் விண்ணப்பதாரரின் இருப்பு பாதுகாக்கப்படாமல் இருப்பதற்கான நியாயமான வாய்ப்பு. விசாரணை, சாட்சிகள் துன்புறுத்தப்படுவார்கள் என்ற நியாயமான அச்சம் மற்றும் பொதுமக்கள் அல்லது அரசின் பெரிய நலன்கள்', ஆகியவற்றை முன்பிணை விண்ணப்பத்தை முடிவு செய்யும் போது நீதிமன்றம் மனதில் கொள்ள வேண்டிய சில பரிசீலனைகள் ஆகும் "விண்ணப்பதாரர் தலைமறைவாகிவிடுவார்களா என்ற பரிசீலனையின் மதிப்பீட்டில், பணக்காரர்களும் வலிமைமிக்கவர்களும் தங்களை விசாரணைக்கு உட்படுத்துவார்கள் என்றும், தாழ்மையான மற்றும் ஏழைகள் தப்பி ஓடிவிடுவார்கள் என்றும் எந்த அனுமானமும் இருக்க முடியாது" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நீதியின் போக்கை விட, முந்தையவர்கள் குற்றம் செய்ய வாய்ப்பில்லை, பிந்தையவர்கள் அதைச் செய்ய அதிக வாய்ப்புள்ளது என்று ஒரு அனுமானம் இருக்க முடியாது.

26. இந்த வழக்கின் பொருண்மைகள் சூழலில் இந்த கோட்பாடுகளை இப்போது ஆராய்வோம். இறந்த விகாஸ் சிங் மற்றும் உஜ்யார் சிங்கின் குடும்பத்தினருக்கு இடையே இருந்த பகைமை

குறித்து இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். எனினும், சட்டவிரோதமாக மணல் சுரங்கத்தில் ஈடுபட்டது இறந்த விகாஸ் சிங்கா அல்லது உஜ்யார் சிங்கா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டியதில்லை; மாறாக, யார் தூண்டுபவராக இருந்தாலும், இருவருக்கும் இடையே முந்தைய பகை இருந்தது என்பதைக் குறிப்பிடுவது போதுமானது.

27 தற்போதைய சம்பவம் தொடர்பாக, மேல்முறையீட்டாளரின் வழக்கு முதல் தகவல் அறிக்கை, குமுவிச பிரிவுகள் 161 மற்றும் 164 இன் கீழ் அவரது வாக்குமூலங்கள் மற்றும் குமுவிச இன் பிரிவு 164 இன் கீழ் மற்ற இரண்டு நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமமூலங்களால் ஆதரிக்கப்படுகிறது. மறுபுறம், ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோர் உஜியர் சிங் தாக்கல் செய்த எதிர் முதல் தகவல் அறிக்கையை சார்ந்துள்ளர், அதன்படி அவர்கள் குற்றம் நடந்த இடத்தில் இல்லை, உஜியர் சிங் தற்காப்புக்காக இறந்த விகாஸ் சிங்கை சுட்டுக் கொன்றார். 13 ஜனவரி 2021 மற்றும் 10 மார்ச் 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் உத்தரவுகள் மேல்முறையீட்டாளரின் உத்தரவின் பேரில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை உள்ளடக்கங்களை சுட்டிக்காட்டுகின்றன. 2020 டிசம்பர் 15 தேதியிட்ட விசாரணை அதிகாரியின் முதல் அறிக்கையில், உஜ்யார் சிங் மற்றும் சந்திரபகன் சிங் ஆகியோருக்கு எதிராக முதற்கட்ட வழக்கு இருப்பதாகக் கூறப்பட்டது. உஜ்யார்

சிங்கின் வேண்டுகோளின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்களுக்கு மாறாக விசாரணையின் போது கூடுதல் தகவல்கள் வெளிவந்ததாக 2021 மார்ச் 8 ஆம் தேதியிட்ட கூடுதல் குற்ற அறிக்கை ரசீது தெரிவிக்கிறது. எனவே, மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டிய வழக்கை, எதிர் முதல் தகவல் அறிக்கை மட்டுமே சார்ந்திருந்ததின் மூலம் புறக்கணித்திருக்க முடியாது.

28. இந்த சம்பவம் நடந்தபோது ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யாபன் சிங் இருவரும் அங்கு இல்லை என்று தெரிவிக்க, 2020 டிசம்பர் 15 அன்று குவிமுச பிரிவு 173 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை உயர்நீதிமன்றம் சார்ந்திருந்தது. இருப்பினும், 2021 பிப்ரவரி 13 ஆம் தேதி முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் உத்தரவிலும், 2021 மார்ச் 24 ஆம் தேதி விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிலும் சுட்டிக்காட்டப்பட்ட விசாரணையின் போது வெளிப்படையான குறைபாடுகளை உயர் நீதிமன்றம் சரிசெய்யவில்லை. இவை மற்றவற்றில்: (i) நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களை கவனிக்கத் தவறுதல்; (ii) சம்பவத்திற்குப் பிறகு நடந்த காட்சிகளை சிசிடிவி கேமராவில் சாரப்பட்டது, முந்தைய அல்லது சமகால காட்சிகளை புறக்கணித்தல்; (iii) ஜபல்பூருக்கும் குற்றம் நடந்த இடத்திற்கும் இடையே உள்ள சிசிடிவி காட்சிகளை சேகரிக்கவில்லை; (iv) ஜோகேந்திர சிங்கும்

சூர்யபன் சிங்கும் உண்மையில் அந்த கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தினார்களா என்பதைத் தீர்மானிக்காமல் கைப்பேசி அழைப்பு பதிவுகளை சார்வுற்றுருந்தது ; மற்றும் (v) கைரேகைப் பகுப்பாய்வை மேற்கொள்ளவில்லை. பிப்ரவரி 13, 2021 தேதியிட்ட உத்தரவில், முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் இந்த குறைபாடுகளை விசாரணையில் கண்டறிந்து மேலும் விசாரணைக்கு உத்தரவிட்டார். இணை குற்ற அறிக்கை ரசீது சமர்ப்பிக்கப்பட்டவுடன், 10 மார்ச் 2021 தேதியிட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் உத்தரவில், அந்தச் குற்ற அறிக்கை ரசீது உஜியர் சிங் மற்றும் சந்திரபான் சிங் தொடர்பானது என்றும், ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங்கின் பங்கைக் குறிப்பிடவில்லை என்றும் குறிப்பிட்டது. ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோரின் முன்பிணை விண்ணப்பங்களை நிராகரித்து 24 மார்ச் 2021 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் உள்ள தவறுகளை விசாரணையில் உள்ள வெளிப்படையான குறைபாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இருப்பினும், இந்த முக்கியமான அம்சங்களை தனியமர் நீதிபதி பரிசீலிக்கவில்லை.

29. இறுதியாக, குவிமுச பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் சூர்யபன் சிங்கும் மேல்முறையீட்டாளரை சுட்டதாக இருக்கும்போது, முதல் தகவல் அறிக்கைக்கும் குவிமுச பிரிவு 161 இன் கீழ் அவரது வாக்குமூலத்திற்கும் அவர் துப்பாக்கியின் பின்புறத்தால் மட்டுமே

அவரை தாக்கியதாக பதிவு செய்கிறது என்று சூர்யபன் சிங் சார்பில் வாதிடப்பட்டது. அரசுத் தரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் புரிந்துகொள்ளும் வகையில் விசாரணை இன்னும் நடைபெறவில்லை, மேலும் பிரிவு 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் கூற்றிலுள்ள உண்மைத்தன்மையை அங்கு தீர்மானிக்க முடியும். இருப்பினும், தற்போதைய நிலையில், முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரிவு 161 மற்றும் 164 இன் கீழ் மேல்முறையீட்டாளரின் இரண்டு வாக்குமூலங்களும் சூர்யபன் சிங் துப்பாக்கியின் பின்புறத்தால் அவரது தலையில் அடித்தது போலவே உள்ளன. மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை தொடர்பாகவும் ஒரு வாதம் எழுப்பப்பட்டுள்ளது, ஆனால் இது சாட்சியங்கள் முன்னிலைபடுத்தபட்ட பின்னர் விசாரணையின் கட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

30. இந்தக் கட்டத்தில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில், முன்பிணைக்கான விண்ணப்பங்களை அனுமதிப்பதில் உயர்நீதிமன்றம் சரியான கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். விகாஸ் சிங் கொலை செய்யப்பட்ட குற்றம் தீவிரமானது. முதல் தகவல் அறிக்கை மற்றும் குவிமுச யின் 161 மற்றும் 164 பிரிவுகளின் கீழ் உள்ள வாக்குமூலங்கள் குற்றத்தில் ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோருக்கு ஒரு குறிப்பிட்ட பங்கைக்

குறிப்பிடுகின்றன. முன்பிணை வழங்கும் உத்தரவு, குற்றத்தின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை மற்றும் ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் மீதான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களை புறக்கணித்துள்ளது. எனவே, உயர்நீதிமன்றம் வழங்கிய முன்பிணையை ரத்து செய்ய போதுமான காரணங்களை கொண்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இ முடிவு

31 . எனவே, மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.. இந்த மேல்முறையீட்டு மனுக்களில் இரண்டாவது எதிர்மேல்முறையீட்டாளர்களான ஜோகேந்திர சிங் மற்றும் சூர்யபன் சிங் ஆகியோருக்கு 1 ஜூலை 2021 மற்றும் 31 மே 2021 தேதியிட்ட முன்பிணை வழங்கிய மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதிபதியின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகள் நீக்கறவு செய்யப்பட்டது.

32. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள், ஏதேனும் இருந்தால், அவையும் முடித்து வைக்கப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."